# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2015 மார்ச் மாதம் 03 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

- **I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்
- **II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்
- **III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்
- **IV.** மனுக்கள்
- **V.** கேள்விகள்

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2015.02.18 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(□/vi (1)15/01)**

அ. மேல் மாகாணத்திற்குரிய கொழும்பு மாவட்டத்தின் மாகாண பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு 2015 ஆம் ஆண்டிற்காக பிள்ளைகள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனரா ?

ஆ. அவ் ஆட்சேர்ப்புக்கு இணங்க பாடசாலை ஒன்றை இனங் காணுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள வகுப்புக்களின் பெயர் அத்துடன் ஒவ்வொரு வகுப்பிலும் காணப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் அவ் வகுப்புக்களில் நிரப்பக் கூடிய மிகுதி வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. வெற்றிடங்களுக்காக பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்காக விண்ணப்பித்தவர்களில் அங்கீகரித்து, அனுப்பியுள்ள எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் இணங்க எவ்வளவு ?

ஈ. அதற்கிணங்க அந்தந்த வகுப்புகளுக்காகச் சேர்த்துக் கொள்ளக் கூடியதாக உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

உ. இவ் வெற்றிடங்களை நிரப்ப எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் 2015.02.18 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**

**(□/vi (1)15/02)**

அ. மேல் மாகாணத்தின் ஒவ்வொரு வலயக் காரியாலயங்களுக்கும் இணங்க 6,7,8,9,10 மற்றும் 11 ஆகிய தரங்களில் எழுத மற்றும் வாசிக்க இயலாத பிள்ளைகள் தொடர்பான அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஆ. அறிக்கைக்கு இணங்க எழுத மற்றும் வாசிக்க முடியாத மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

இ. இவ் வகுப்புக்களில் சென்ற 5 வருட காலத்தினுள் பாடசாலைக்கு வருவதை இடை நடுவில் நிறுத்திய பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. அது எப் பாடசாலைகளில் ? எத் தரங்களில் ?

**03.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ விவசாய கமநல அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனம், கைத்தொழில், சுற்றாடல் நடவடிக்கை அத்துடன் கலை மற்றும் கலாச்சார நடவடிக்கை அமைச்சரிடம் 2015.02.18 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(□/vi (1)15/03)**

அ. விவசாய கமநல அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனம், கைத்தொழில், சுற்றாடல் அமைச்சர் V வது மாகாண சபைக் காலத்தினுள் விடயப் பொறுப்பு அமைச்சராக [கௌரவ உதய கம்மன்பில அவர்கள் ] தமது பதவி நடவடிக்கைக்காக வெளிநாடு சென்ற சந்தர்ப்பங்கள் எத்தனை ?

ஆ. வெளிநாடு சென்ற நாடு, சென்ற தினங்கள் அதற்கிணங்க வெளிநாட்டில் இருந்த தினங்கள் யாவை ?

இ. அத் தினங்களில் கலந்து கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை ?

ஈ. அமைச்சருடன் வெளிநாட்டுச் சுற்றுலாவில் கலந்துகொண்ட ஏனையவர்கள் யாவர் ?

உ. ஒவ்வொரு பயணத்திற்காகவும் செலவு செய்த நிதி எவ்வளவு ?

ஊ. சுற்றுலாவிற்காகச் செலவு செய்த மொத்த நிதி எவ்வளவு ?

எ. அந்தந்த சுற்றுலாக்களின் மூலம் மாகாண சபைக்கு கிடைக்கப் பெற்ற பலாபலன் யாது ?

ஏ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ எம்.ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)15/04)**

அ. நீர்கொழும்பு கல்வி வலயத்தினுள் 2009 ஆம் ஆண்டின் பின்னர் மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை ?

ஆ. அவ்வாறு மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர் மற்றும் மூடிய சந்தர்ப்பத்தில் அப் பாடசாலைகளில் காணப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு ?

இ. 2015 ஆம் ஆண்டினுள் மூடுவதற்காக நீர்கொழும்பு கல்வி வலயத்தினுள் வேறு பாடசாலைகள் காணப்படுகின்றனவா ?

ஈ. அவ்வாறு நீர்கொழும்பு கல்வி வலயத்தினுள் மூடுவதற்காக பாடசாலைகள் காணப்பட்டால் அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவை ?

உ. அவ்வாறு மூடுவதற்காக பாடசாலைகள் காணப்பட்டால் அப் பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் பிள்ளைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு ?

ஊ. மேலே கூறப்பட்ட படி பாடசாலைகளை மூடுவதற்குரிய காரணம் யாது ?

எ. மேலே கூறப்பட்ட படி தற்போது மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் பிள்ளைகளை வேறு பாடசாலைகளுக்குச் சேர்த்திருந்தால் அவ்வாறு பிள்ளைகள் ஆட்சேர்க்கப்பட்ட புதிய பாடசாலைகளின் பெயர் மற்றும் சேர்க்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு ?

**05.** **கௌரவ எம்.ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் மற்றும் வியாபார அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(□/vi (1)15/05)**

அ. நீர்கொழும்பு கல்வி வலயத்தினுள் மே.மா/ நீகொ/ஆடியம்பலம் மஹா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய விஞ்ஞான கூடத்தை வீதிக்கு தெரியுமாறு நிர்மாணிப்பதற்காக பாடசாலையில் காணப்பட்ட கட்டடம் ஒன்று உடைத்து அகற்றப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. நீகொ/ஆடியம்பலம் மஹா வித்தியாலயத்தில் உடைத்து அகற்றப்பட்ட கட்டத்தில் நடாத்தப்பட்ட வகுப்புக்களை இப்போது நடத்த ஒழுங்கான இடம் ஒன்று இல்லாமல் பிள்ளைகள் கஷ்டமான நிலைமை ஒன்றுக்கு உட்பட்டுள்ளனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இந்த வித்தியாலயத்தில் உடைத்து அகற்றப்பட்ட கட்டடத்தில் நடாத்தப்பட்டுக்கொண்டிருந்த வகுப்புக்களை நடாத்துவதற்கு உங்களினால் இவ்வேளையில் வேறு கட்டடமொன்றை அப் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

ஈ. இந்த நீகொ / ஆடியம்பலம் வித்தியாலயத்திற்கு கிறிஸ்தவ சமயத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை எப்போது நியமிப்பீர்கள் ?

உ. மேலே உள்ள பிரச்சினைகளை எக் கால எல்லையினுள் தீர்த்து வைக்க நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ நிரோஷன் பாதுக்க அவர்கள்**

"சட்டக் கல்லூரி இவ்வேளையில் சட்டத்தினால் நிர்வகிக்கப்படாது தானாகவே முடிவு எடுக்கும் தாபனமாக மாறியுள்ளது, இத் துறையில் உயர்ந்த பொறுப்பினை வகிக்கும் நபர்கள் சட்ட கல்லூரி மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது இது தொடர்பாக முறையிடுவதற்கு மாணவர்களுக்கு தாபனம் ஒன்று இல்லை, நீதி மன்றத்திற்கும் செல்ல முடியாதுள்ளது.

இவ்வாறான நிலைமை ஒன்றின் கீழ் நூறு வருடங்கள் நிறைவுபெறும் சட்டக் கல்லூரியின் அபிமானத்தைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு ஒப்படைக்கும் பொறுப்பு இந்த அரசின் கடமை ஒன்றாகும் எனவே மிகவும் கஷ்டத்திற்கு உட்பட்டுள்ள சட்டக் கல்லூரியின் மாணவர்களுக்கு நீதி ஒன்றினை வழங்கி சீரழியும் நிலையில் உள்ள சட்டக்கல்லூரியில் காணப்படும் சிக்கலை விரைவாகத் தீர்க்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது." **(பி/vi (1)14/08)**

**02. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்**

மேல் மாகாணத்தில் இவ்வேளையில் பாடசாலை பிள்ளைகள், பெற்றோர்களிடமிருந்து இடைக்கிடையே நிதி அறவிடப்படுகின்றது முதலாம் தரம், ஆறாம் தரம், மற்றும் பன்னிரண்டாம் தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போதும் அதேபோல், வேறு வகுப்புக்களின் தேவைகளுக்காக பிள்ளைகளிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்படுவதனால் அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உட்பட்டுள்ளனர் எனவே மேல் மாகாணத்தில் பாடசாலை பிள்ளைகளிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் நிதியினைச் சேகரிப்பதை (வசதிக் கட்டணத்தைத் தவிர) நிறுத்த வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)14/09)**

## X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2015.02.19 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,

செத்சிறிபாய,
பத்தரமுல்ல.